4. வெல்லைப் பதியின்முத்தி கொடுக்கின்றேன் வனா
மூல்லைத் தலைமனுக்கடுதிக் கின்றே னிர
வுக்கும் பகலுக்குந் திரிபிக்கும்படி
யுச்சந்தனிலச் செங்கதிரச் சந்திர
னச்சங்களிலாது
சேவ்வைக்குறி கொடுக்குமிலக்கம் போலெழு
குவ்வைப் பிரவையிட்டொளிர் தற்கென்றே தலை
கத்தின் பிரிவிற்றங்க விதித்தும் புவ
னத்தின் பலவஸ்துக் தெளியத்தந்திரு
ளைக் கொன்ற விநோதர்.

வெய்யிற்கனலி மிக்கபகற் கென்றே வளர்
துய்யச் சசியுமற் றிரவுக்கென்றே சொலி
வைத்துந் திவர்மற்றுஞ் சமயத்தின் றொகை
யைக் கண்டறியப் பங்கொடு திட்டம்பணி
யிட்டங் கொளலானர்
தினநாலினெங்கள் கத்தன் வேலையே.

5. துள்ளிக் கடலலைக்கு ளடித்தும் போரிடு
கள்ளத் திமிலிமச்ச வளப்பந்தா னதின்
முத்தும்பல நத்துங்கன சித்துங்கலி
சுற்றும் பணிவைத்தன் சகலர்க்குங் கிரி

கிக்குஞ் செயலேது.
வல்லப்பு யலுதித்த துலேக்கென்றே சிற
குள்ளப் பறவைமெத்த வமைக்கின்ருன்—வன
லட்சஞ் சிகிலட்சங்கு யிலட்சம் பகம்
லட்சங் கிளிலட்சம் பலபச்சும பர
விச்சென்றிடு நேர்மை.

சொல்லுக் கிருவிதத்தினு மச்சங்கோடிகள்
வல்லொத்த குருவிக்குளு மிச்சம்பார் நட
னப்பண்பு மிருக்குங் கடினப்பண்பு
படிக்கும் பரனைப்பண்பு துதிக்குங் கறி
கட்கும் பலதாகு
முரமாகுமைந் தினத்தின் வேலேயே.

6. தொல்லேக் கடலுடுத்த நிலத்தின்றாள் கொடு
பல்கச்சகர வகுப்பை யமைக்குங் காலே
கடத்துங் கரிதத்தும் பரிதத்தும் புலி
தத்தும் பசுதத்தும் புருவைச் சிங்க
வகுப்புந் திரள்கோடி.

யையர்க்குரிமையுற்ற மனத்தின் பாலவர்
செய்வித்த செயன்முற்று முணத்துங்கா
ணடவுக்கென்று ழவுக்கென் றுணவுக்கென்றழ
குக்கென் றமர்கட்கென்றிவர தற்கென் றமை
விக்கும் பரிபாலர்.

துவ்வத்தரையிலுற்ற வனத்தின்பால
ருளொவ்வப்புகழுவைத்த மதிப்பொன்ருேவுழு
வுக்கண்டலேயத் தந்திவரைக்குங் குறை
யற்றும் பழுதற்றும் பெருகத்தந்தரு
ளிட்டும் புகழாக
வுயராசிதந்துளத் துளாடினர்.

7. தெள்ளிப்புகழுரைத்த தமிழ்க்கன்பாய் வெகு
கொள்ளேப் பொருளளிக்க நினேக்குங் காரண
வித்தன் கனமுத்தன் றவசித்தன்றயை
வைத்தன் பரிசுத்தன் பரிசுத்தன் பரி
சுத்தன்றயவாக

வையப் பொருள்படைத்து முடிக்குங்காலுரி
மையிட்டிரு மனுக்கடமைச் சம்பூரண
லக்கங் கொடுயிர்க்கும்படி வெட்கம்படர்
துக்கந் துயருக்கும் பழுதுக்கும் பல
துக்குங் கெலியான

செவ்வித்தலைமை மிக்கேதனிற் றென்பா யத
மெவ்வைக் கழுகுறச் செய்தமைத்துந்தான வர்
சட்கம் புவியைத்தந்த தனிற்பங்கு செ
லுத்துங்களெனப் பொங்குசதுர்த்தம்பம
ளித்தும் புகழ் நீட
வறுநாளிலந்த மட்டுமானதே

8. தெய்வப் பொருண் மகிழ்ச்சிபெருக்கும் பூரண
னெய்வுற்றிடு மதத்தையகற்றும் பாவல
னற்சங்கையு நற்செங்கையு நற்சங்கமு
நற்றுங்கமு நற்புங்கமு நற்பொங்கமு
நற்பங்கு முளாளர்

பொய்யொத்த நரகுக்கு வழிக்கொண்டே யெழு
மையக் கசடறுத்து விலக்கின்றேன் மகி
மைக் கஞ்சமலர்ச் செம்பதன்மைப் பஞ்சவி
கற்றுஞ்சிடமைக் கண்கனியைத் தந்த
தமைப் பங்கமிலாத

செவ்வைக் குணணியுற்ற வனத்தின்பாலருள்
செய்தக் கொலுவியற்றுஞ் சயிக்கந்தானுரை
யிட்டுங் கலையிட்டுஞ் செயலிட்டும் பறை
யிட்டும் பொறியிட்டுந் திறமிட்டுங் கவி
யிட்டுஞ் சொலலாகு
மதிஞாய மெண்குணத்த னுடலே.

---

## 9. வண்ணம்

### ஆதிமானிடர்தோற்றம்.

9. விரு. தயை நிறைந்த பரன்விணினிறைந்த பொரு
டரை நிறைந்த பொருள் பலதுமே

சருவபண்பினுடன ருளியங்கை யொரு
தனிய தண்டலையினடுவிலே
செய நிறைந்த விரு நரரை விந்தை மிகு
செயலுடன் செய்ததி மகிமையாய்த்
திருவுளங்கனிய நிறைபலன்க ளொடு
திரள் வரங்களையு முதவியே
மய நிறைந்தவன மதிலெழுந்து நரர்

வரை யெழுந்த புடவியை யெலாம்
வகையுடன் பெருமை பெற நடந்துகொள
மறைகளின் பெரிய திருவிழா
நய நிறைந்த வெழுதினமு வந்ததென
நடை புரிந்து மறு செயலிடா
னலமதென் று பலதையு மகிழ்ந்தினிய
நளினவிங்கித நெறிகள் சொனான்.

தான தான தான தான தான தான
தான தானன தான தனனா
தத்தனனா தான தனனா தத்தனனா
2. தானன தத்தனனா
தான தனதத்த தத்தத் தத்தத் தந்த
தான தனனா
தான தன தனன தன தனதனா.

1. ஆதியானொரேக தேவராறுநாளி
லேவியோம ழுமார்து பொருளோ
டித்தரை மேனீடு பலதாம் வஸ்துவுமே
மாதயைவைத் தொரு நேரோடு படைத் தியல்பாய்
ஞானவகத்துப் புத்திச் சித்தத்தன்பின்
மேலுமணியா

யேதன்மீதிலே மனுவ் விநோதமாயொ
ராதி மானிடனை வனையே
யுச்சித சாரூபமுடனே சிஷ்டிகர்தா
னே பணியற்புதமாய் நாசிகை புற்கலனா
மாவி விடுத்துத் திட்டப்பட்டுப் பண்பு
தோண வுடனே

யாதமாகவே யனொனிஞம மோதி
நாலு வாய்மையதான வரமே
கட்டளை செய்தாசி மிகவேயிட்டினமே
பாதகமுற்றிடு தீதான தற்றபடியாய்
மேதினியுக்குட் சக்கரச் சக்கரிக்கண்ட
னுயிரெனவே
மாவழகு நிறைய வுட லுயிருமே

2. ஆன நீதிஞாய தேவஞான போத
தீதவேத புராண தவமே
நற்சுக மேலானபவுசே துக்கமிலா
வாய்மை மனத்தினிேனுடே பரிசுத்தமுமா
யாகநிறைத்துப் பத்திச் சித்துக்கென்று
தானருளியே

வாரிமேரு தீவு பாலை காடு நாடு
பூமிமீதுள சேனைகளையே
முக்கியமா யாளுமெனவே யுத்தமனு
ராதிதனக்கிதமே யாவலுறச் சொலிமே
லாகவமைத்துப் புத்திச் சுற்றுத்தந்த
னேகவளமா.

யாயனுர்தயாபமாக மேவியே யெ
நாளுமே யவனோடு லவியே
மெத்தவுமே நீதிசொலவே யத்தனையே
தாதையெனத் திடனேடேமொழியப் பரனுர்
மானிடனுக்குத்துப் புத்தக்கச் சொந்த
நேயமுடனே
வாய்மைதரு மகிமை சொலி முடியுமோ

3. சாதி சாதியாமனேக சீவன் வான
வீதிமேவிய சேனை குருகோ
டிப்புவிமேலார்து மிருகாதித் திரளோ
ரேர்வன வற்றையுமே யாதமிடத்தியல்பாய்
நாடியழைத்துக் கிட்டக் கட்டுக்கொண்டு நாமமிடவே

யேகதேவனேத வாதம் ஞானமோடு
சீவனுன பிராணிகளையே
தக்கதுவே யான மரபோடக்கணமே

நாமமிடத்தகவே யாமென வற்புதனார்
தாமு நிசத்துக் கொப்பித் தப்புத்
தந்திலாத தெனவே

சாகை கூறயாவுமாத மோதும் வாறு
கீழதாய் வழுவா தொழுகவே
யிட்டமதாயேவல் செயவே சொற்றவரு
வாசக சத்தியமோடாதரை யுற்றதெலா
மோர்குடையுக்குட் கட்டுப்பட்டுச் சென்ற
மேன்மை சிறிதோ
மேவிவளரரிய வனநடுவிலே

4. சாரி சாரியாக வாழை மாபலாவு
சீனிமாதளை கோடிவிதமோ
நெற்செடியோ பாளைவிடு தேனற்பனையோ
நீள்கமு கெத்தனையோ நேர்மகிளெத்தனையோ
காவுயர் பக்கத்துக் கொக்கிக்குப்பண்ப
தானருசியே

கூடிவானமே யளாவுகேதர் நாவல்
சூழுமா வழகான வனமே
திட்டமதாய் ஞாலநடுவே வைத்தெழிலாய்
நாலுநதிச் சலமேலாடி வனத்தினிளு
டோடியு மெட்டுத்திக்குத் தட்டிக்கெம்பி
வீழ்கும் விதமோ (1 மோ. 2, 9-11.)

சாலைமீது தேவர் தானுலாவுவார்கள்
காவினோர் நடுவாக வளமாய்
நற்பெரிதோர் சீவமரமே யத்துடனே
ரோதிமரத்தையும் வேறாய் முளைவித்த தன்மே
லாதிதிருட்டிக் திட்டத் திட்டத்துங்க
ளுனவனையே
மேன்மைமிகு மரிவையுடன மையவே

5. மாதை மாவிசேட ரூபமாகவே செய்
வோமி நாமௌன யோசனையிலே
சிஷ்டிகளுராதி தனியாய் நிற்பது தீ
தாமென வக்கணமே மானிடனைத் துயின்மீ

தேயுமடைத்துப் பக்கத்தத்திப் பங்கி
ஞோர் பழுவையே

சேர்விலாவி ஞாடுவாரிமே தையாலே
மூடி மானிடனோடு துணையாய்
வத்தனையாய் மேவிவரவே கற்புறவே
தோகைமயிற்கிணை சோடா மெனவுற்பனமாய்
வேதவிசித்திரச் சித்துக் கொத்துக் கண்ட
மேனியுடனே

மாசிலாத பாவையே செய் தேவையாக
நாமதேயமுமோத மிடவே
பக்கிஷமாய் மாதை வலமாய் வைத்துடனே
யாசியளித்துலகூடே பெருகத்திடமாய்
நேயமணத்தைக் கட்டிக்கட்டிக் கொஞ்சி
வாழ்கு மெனவே
தேவர் தருமனைவியுடன் மொழிகுவான் (1 மோ. 1 : 28)

6. மாசினேகமேய தீதமானமேயெ
ஹவியே யொளிவான மதியே
யற்புதமே தேவசெயலே நற்கனியே
யேக துணைக்கெனவேயான தவக்கொடியே
ஞான வரத்தைப் பெற்றுப் பொற்புக்கண்ட
பானிஞெளிவே

தேடிஞலுமே வாரத நேர்மையான
தூயமா பொருளான மணியே
ரத்தினமே கூவுகுயிலே துப்பரவே
சோபன மெய்ப்புறவே பூவுலகுக்கரசே
பேசிய தத்தைச் சொற் சொற் சொற்கத்தின்பெ
ணைவின் மணியே

வாலே சேர்பிராயமே மஞபிஷேக
மேகணே யெழிலான வனமே
பற்பனியே தேன்மதுரமே மொக்கிஷமே
பாலமிர்தக்கட்லே மோகவிதச் சுனையே
கோகன தத்துக்கொப்புச் சொக்குத் தங்கு
தீபசுடரே
தேயமதினுள பொருளி னதிகமே

7. வேதனார் விநோதமேவி மானமேவி
சேடமே தெளிவான மணியே
சித்திரமே கோடிரவியே சற்குணமே
கார்முகின்மைக் கடலே நீள் விழியுட்கயலே
பாவுண் மறைப்புச் சொற்குட் கட்டித் தங்க
மான நயமே

லீபனோனின் மேவுகேதர் சாயலேக
ளொடியே பெரிதான வறமே
நிச்சயமே வானவடிவே சொற்கலையே
பேரழகுத் தமியே நால்வர முற்றவளே
சாதுகுணத்துச் சுத்தப் பத்திக்கன்பின்
ரூபவதியே

மேன்மையான காவிலே குலாவி நீடி
வாழ்க மேவிய நேசமனேயே
பொற்கொடியே ரோசமலரே சற்சனமே
சேர்கனியிற் சுவையே யாலிள நற்றளிரே
தேறலினிப்புத் தட்டுச் சொற்கரும்ப
தானரசமே
கோவை நிகர் பவளவிதழ் வனிதையே

8. வீதமேயென் மேதையான மேதையேமி
னேகளே பரமேவிசையமே
யுச்சிதமே சோதிமயமே யிப்பொழுதே
மானிட னத்தியிலே நீ யெடுபட்டதனேன்
மானிடத்திப்பட்டச் செப்பத் தின்ப
நாமமவா

யானதா லிவாறுமாதினேடு தாதை
தாயை யார் வலன் மாறி யிசைவான்
விக்கினமோர் பேதமடார தொப்புரவா
யோருடலுக்குயிரா யோர் சதை யொப்பனேயே
நேர்மை விதத் துத்திட்டப்பட்டுப் புங்க
மாவரெனவே

வேதனா ரிதோதினார நேரமாத
மேவையோ நிறுவாணமுடனே
வெட்கமிலா வானசுரர்போலுத்தம சீர்

வாழ்வு மிகுத்தவராயே தன் வனத்தினிலே
மேவுவிதத்தைச் சற்றுக் கற்றுக் கண்டு
நாவுளவரே
கூற வெளி தலவதொரு புதுமையே

---

## 10 வண்ணம்

### ஆதிமானிடர் தோத்திரம்.

10. விரு. சார்ந்த வெழுந்தின மாண்டகைபண்டிகை
தான்ஞெழ வென்றதமே
சாந்த வணங்குடனேய்ந்துற வங்கொரு
தாழ்ந்த னலின குழியூ
டேர்ந்த கொடுங்கணம வீண் கெறுவங்கள் கொ
டோங்கி யெழுந்தடமா

யூங்கின் விடந்தரு பாம்பினெடுஞ் சட
மூன்றி நடந்துடனே
சேர்ந்து வனந்தனில் வாழ்ந்துறையுந் திரு
வாஞ் சிறு மின்புறமே
தீங்குடன் வந்தொரு பாங்கனெனும்படி
தேர்ந்த நயஞ் சொலியே
போர்ந்திடு வஞ்சனை யோர்ந்துள நம்புதல்
பூண்டு கடுங்கனியே
பூந்து பிடுங்கிய மாந்தர் விழுந்தபோ
லாங்கை விளம்புவமால்.

2. தான தனந்தன தானத்தனு தனு தன
2. தானு தன தன தான தன தானன
தந்தனு தனன தன தானனு

1. ஆதம்விருந்தனையே வைக்குமே யனுதிய
னுல்வரமுந்திகழ் ஞானத்தினுன் மகாபல
னுருயருள் கிருபாநிதனுளெனு
மேழாவது தினமானதனிலே பல

வேலை யொழிந் தழகாயுச்சமாய் வினேர்பர
தீசி நெடுந் தருசூழ் நெட்டிலே மூகாமையி

ஞோர் தாருவினுயர் சிவமர நீழலின்
பேரோரறிவின் விசால மெதிரேயுற

வாதி பரம் பொருளானத்தையே சொலார்புக
ழோடு பணிந்து மனோபத்தினகவே யொரு
தேவாவெமை யுலகூடுறு மனோனர
ரூபாயமையும் விவேகமுயர்வான துன்
விந்தையா லடியவரை மேவுவாய்

2. ஆரண சம்பனனே நித்தனே வினோ
ரரசே புவியெங்கும் விலாசத்தனே செயாவரு
ளானே சரீர மிலாத வருபாசுப
வானேர் நவகண சேனையுடை சூழ் திவிய

மாதவ சுந்தரனே கத்தனே மகாசுவி
சேட துரந்தரனே சுத்தனே தயாபர
சீலா பவவிருடீ திடருறு துயர்
நேயாமகிழ் நிறைவான பரிபூரண

வாசை தருங்கடலே நிஸ்களா மனோகர
மாகவு மெங்களையே புஸ்பகாவிலே கன
வாழ்வோடிரு மெனவே யளவிலா நெறி
யோடே யெமை முடிசூடிய தயாநதி
விஞ்சையா கிருபை நிறைவேதனே

3. வேதபரஞ் சுடராதித்தனே யெனூழியும்
வாழ்வுசிறந்தவனே யுச்சமா யுலாவிய
நாதாமனுடர் கனோவினுரையாலும்
விண்ணோர் தானருளிய கீதவிசையூாலுமுன்

மேன்மை மிகும் புகழே சற்றுமே சொல்வாரிலை
வாய்மைகளுன் றிருவேதத்திலேயு னேர்மையை
யார்தா னறிவர்க ளாருமறியார் துணை
வேறே துணை யலதே தொரு சினேகிதர்:

வேகமிருந் துனையே மெச்சியே மெயாயுற
வாகநினைந்து சலாபத்திலே கைசேர்வையி
லே தானிரு கழலே தினமுமே தொழு
வோமே யெமதுயிரான பரனே யென
இந்த வாறிசையு மொரு நாளிலே

4. மேள முழங்கிய தாளத்ததி ரதீரெனு
வானின் விளங்கிய காளக் குலோர் குலோரிடு
சீரார் தருவுடன் ஞான செபமாலை கள்
வாகாகிய கலைசீடு வணமானதும்

வீசியருந் துதிபாடிக் கின்னரமேகையி
னேரொடு கொண்டு திடாரிக்கமாகவே பல
வாஞ்ஞி பரதி தூதர் கதிலாசியர்
ஞாஞ்ஞி சயபிரகாச நவசேனைகள்

வீணைகளும் குழலான் முட்டியே துதாமென
ஆதியெழுந்து பிரதாபத்தகா வகாவென
நாலாவித பத கீத வொலியோடொரு
சாதாரண மறையோது பரமானதி
லின்பமாயுலவு சருவீசனே

5. தூதர் கடங்களையே யிஷ்டமாகவே செய
வொணுவமிண்டுடனே தத்தியே பராபர
ஞேடெசரி மொழி பேசி யெதிராடிய
வேதாள படைகளானதை யெலாமெரி

தீகிரையந்தனிலே நித்தமே யயோவென
வேகதறும்படியாய் விட்டுமே கொடூரம
காவேதனையுறவே செய்துடனே நிறம்
வேறாயுருவ சொரூப மிருண் மூடிய

சூளை யெழும்புகை போலுக்கிரமா யடாதது
சீறியெழுந்து பிசாசுக்களாய் மடேரென
மீளாநரக சுவாலையினில் வீழ்கவும்
வானேன் முனிவுடனே மொழியலாகின
னந்த நாள திகெறுவமாகியே

6. தூடணவங்கையோ டேதுப்பிலா தகூளிகன்
கூடியெழுந்து புகாரிட்டுமே பொறுமையி
ஞலே மனுடரையே கறுவியே யவர்
வாழ்வே யழிவுறவே வினையமே செய்.

மேவிவெகுண்டடர் காவிற்சரேர் சரேரென
நீளரவந்தனு ரூபத்திடீர் திடீரென

வாதாமுதலமை வானபடியா லவன்
வாயே செல்விலைமாதினிடமே யொரு

தூது நடந்தவளோ டொப்புசலாப வாய்மைக
ளோதி நயம்பெறவே யெத்தியே சினேகித
தாயேவளமிகு சீவவனமீதுமை
யாயோனருளிய மேன்மை பெரிதேயென
வன்புபேசியும் வினையமாகவே

7. சாதிமடந்தையரே சத்தியே பொனேபணி
சூழ்பரஞ்சியிலே மிச்சமே கணேயதி
ரூபாகிய செகசோதிமயமே மயிலே
கோகில வனமேகிளி சரோருக

பாதபளிங்கொளியே யஸ்பியே கோமேதகமே
வளரும்பிறையே முக்கியமே மனோன்மணியே
ரோசவின் மலரே கனியிலேயுறை
தேனே பரிமளமே பவளமே தமிழ்

சார்கவியின் பொருளே தற்கமே விஞ்ஞான மக
ளாகு மிளங்கொடியே பட்சமே சபாசுபொன்
மானே நடுவனமேவுமொரு தாருவி
னூடார் கனி தினலாதவிதமேதிது
சிந்தையோ டுரை செயெனவோது வாள்

8. சாலைவனம்படு சாலாத்தெலா முளானவ
னேகவிதங்கனியே துய்த்துய்வீ ரிதே நல
மாஞானயமிடர் தானறி பலாசியி
னூறாழ் கனிபொசியாமல் வழியோடிரும்

வீவுவருந்திடனே யட்டியே யிலாதென
வேதன் விளம்பினதோர் செப்பமே மினாள் சோல
வோதுள நகை செய்தே கவடலோ விது
நீதோரணுவிலை மாய்வுமிலை யார்தல்செய்

தானவனின் கொலுமேவிச் சமானமாயர
சாள்வ தரிந்ததனலத்தனரு ளதுசெய்
தானே மடமயிலே யெனவ்வேளையி

4

வேவாள் மனதின் விகாரமுடனே கனி
தின்றுமே பவவினையின் மூழ்கினாள்.

---

## 11. வண்ணம்

### பாவ விழுதல்.

(விரு.) அரவானது கவடாய்முன
மனை யேவையினிடமே
யறமே கெடுதிகளாகிய
மொழிகூறிட வவளோ
பரனார் பகர்மறைமீறிய
படிகாவ தனடுவே
பவமானது நலமானது
மறிவாலறி மரமே
கரமே கொடுகனியானது
களவேசெய் தணுகியே
கனிவாய் மணமகனோடவ
டினமாசற லழிவாய்
வரநாலவை தவறுனது
மயனாயுத னவர்டால்
வரலாகிய கதையாவையும்
வகையோடினி மொழிவாம்.

4 தனனதன தானதந்த
4 தந்தன தானதான
தானதன தானதன தனதனா

1. அரவி னுருவாக வந்த
வலகையனை யேவையண்டை
பகரு மொழியான தந்தை
விபரமுடனே விளம்ப
வந்தமிலாத சோதியிந்த விசாலமான
சுந்தரசீவகாவை நுந்துதனேர்மை நேர்மை

சகலவித தாபரங்
கணடுவினுயர் வானநன்றி
டர்களையறி தாருவின்

கனிகளை யயிரா தடைந்த
விந்தைகளோ சொலாயணங்கெனவே பிசாச
டர்ந் துரைகூற வாத
மங்கைய தோடுசாவி

யதிகிருபையே நிறைந்த
வொரு பரம தேவனிந்த
வனமதினிலே யெழுந்த
பல தருவிலே பழங்க
டினறிட வாய்மை யோதிநன்றெடு தீமையாய்
தலின்றருவூ றுணுதருந்திட மாய்குவீர்கள்
சாவுறுதி யாமெனவும் விலக்கினூர்.

2. உரிமையுடனே சுயம்பி
னுரையினெறியே நடந்து
நடுவனமாக நின்ற
விலகுமரமே செறிந்த
புன்கனியே தொடோமனந்த னெநாளிலே
நஞ்சுரு தீயதாருவின் கனியார்தவீவு

வருமென வெமோடறைந்த
துறுதியென மாதுவந்து
மொழியவதி கோரவஞ்ச
வலகையவ ளோடியம்பு
மொன்று மிலாதகாலை சுந்தரமேன்மை நீடு
தஞ்சொயரூபமாய் வளைந்த சுவாமிநாத

னுெழியவுமை யேகனன்ற
ழியவும் வதையே புரிந்து
கொலுவ திலையேமதங்கி
மரணம் வருகாது நம்பு
சம்பரமமாக நீயுநன்றறி சாலமீத
ருங்கனியார் துயானவின்ற சொன்மீறிடாது
தீவிரமதாய் நுகருமரிவையே.

3. வரமிகுதியாகி யுங்கள்
விழிகளதுவே திறந்து
நலமிடர்க டானறிந்த

மலனினிகரா யுயர்ந்து
துன்பமிலா தெநாளுமின் பதிகாரமேசெய்
தன்புறவாழ்குவீ ரனந்த வைபோகமாக.

பலநினைவெனு திணங்கி
தெனதினிய போதகங்கொ
ளொருகுறை வராது சங்கை
யணுவளவிராது மங்கை
சிந்தனையே படாதெழுந் தழகானதாரு
வின்கனியார்து மேல்வரும்பல ஞேய்விராது

வயணமி தெலாமுயர்ந்த
கடவுளுளமே தெரிந்த
தறிவின்மர மேன்மை கொஞ்ச
மலவெகு பிரதாபவிந்தை
தண்டலையே கொளாதெழுந்த பலாசியூடி
தொன்றுத வாததேதென்று சலாபமாக
வேவையுட ஞசலகை வினவவே

4. இரவி யொளிவாய் வளர்ந்த
வமிர்தரச மானவின்ப
மதிவனிதை தானுமங்கு
மரமிசைக ளுகியுண்க
நன்றிதுபார்வை யூடலங்கிரு தமாமலாது
புந்தியைநேர் துமேன்மையுந் திகழ்ஞானதாரு

மதுரகனி நாமருந்த
மகிமை திறலேமிகுந்த
கடவுளுடனே சிறந்து
சரியிணைய தாயுயர்ந்து
சந்ததம்வாழ்க லாகுமென்றுள நாடியாவல்
பொங்கிய நேரமே பழங்கொய்து தானுமார்தி

யினிமையெனவே மகிழ்ந்து
கணவனெதிர் போய்முனின்
றவனையுமுணவே வருந்தி
யிருவர்களுமே விழுந்து
சஞ்சலமூழ்கி நாணமிஞ்சிய தாழ்விஞேடு

தும்பரசாகை மேலணிந்துரு மாறினூர்கள்
பாவவிருண்மூடி மதி குறுகினூர்
தும்பர் = அத்திசாகை = இலை

---

## 12. வண்ணம்

### ஆதிஞாயத்தீர்ப்பு.

(விரு.) அண்டம்புவி யெண்டிசையுந் தருசீ
ரன்புந் தயவும்பெருகும் பெருமா
னந்தம்ப டலங்கிருத செஞ்சுடர்போ
லங்கந்திக ழும்பர்வளைந்திடவே
தண்டும்பயிரண்ட மதிர்ந்திடவா
சங்கம்படு நந்தவனந்தனிலே
சம்பிரங்கொ டெழுந்துவிரைந் துடனே
கந்தங்க நவின்ற மரந்தனிலே
பண்டின் பழமுண்டு மயங்கியுமே

பண்பன்றி விழுந்தவர் தங்களையே
பங்கங்க டொடர்ந்து மடிந்தழிதா
பந்தம் படுமென்று குணுங்குடனே
தெண்டம்படவுங் கெடவுஞ் சிறைசூழ்
செந்தங் குறவுங்கடம் விண்டினமே
தின்குங் கனியின் பழியொன்றறவே
சென்றன்பு புரிந்தவிதங்கள் சொல்வாம்.

தானதனந்தந் தனந்தத்தந்
தனத்தத்தா தனத்தானன
தானதனந்தந் தனத்தத்த
தானதனத்தத்

2. தனதானதான தனதானதான
தனதனனு தனனதனதானனு

1. சூரியனுங் கண்டிதம் பட்டும்
பறக்கத் தாரணிக் காகிய
வாருதியின் சஞ்சொ லிச்சத்த
மாகநவி னித்தர்

துணைநீடு தேவமறை வேதபோத
சுபஞான தீபவொளி வானசோதி

கேருபினும் பரஞ்சுற்றுந்
துலக்கத்தோ டெதிர்ப்பாகிய
வாகனமுங் கொண்டதிற் சற்று
வாச பரிசுத்தர்
கிரிமீ துலாவுபொரு ளாதிமூல
கிருபையாளனை திரியேக தேவர்

தூயமிகும் பங்கயஞ் சிக்குந்
திறத்துச் சேவடித் தாளிணை
யாவர்களுங் கண்டகத்துக்கு
ளேமிகவு மிக்க
துணிவோ டெநாளுமதி நேயமான
துதிபாட மேவுசுவி சேடசீலர்
மகிமையி னுசனவல பிரதாபனே.

2. (கலி.) மண்ணோர்கள் பாதலத்தோர் மற்றனந்தமண்ட லத்தோர், விண்ணோர்களாயினு முன்மேன்மை சொலக் கூடியதோ, பெண்ணேவை செய்தபெரும்பிழையைத் தீர்க்க வந்த, கண்ணேபூங்காவிற் கனன்றுநடுக் கேட்டனையோ.

3. தூதர்களுஞ் சங்கிதங் கொட்டுந்
திருத்தத் தோடிசைத் தாடிய
கோடியனந்தம் பரத்துக்குண்
மேவரிய பத்தர்
தொனிகாளமாய குழல்வீணை நாக
சுரமேள தாமெழுகோடி பாடல்

சீரணியுஞ் சிந்துடன் கட்டும்
பதத்துக் கோவையிற் றாதுகண்
மாலைகளும் பண்பிசைக்கொத்த
ஞதியொரு வஸ்து
செயல்ஞான நீதியுள தேவதேவ
னெனமேன் மையாகவதி தூதரோடு

சோபனமுந் தென்புடன் செப்புந்
தவப்பத்தி ராசனத்தோர் தொழு

தேவனெழுந்துங் கதிக்கொத்த
காவதிர மிக்க
துரிதான வோசையுட னுதமே யெ
விட நீசொலாயெனவு மாதமோடி
மரநடுவே யொளிய மனையாளுமே.

4. (கலிப்.) சங்காரகத்தன் சமஸ்தபொருளும் படைத்தோன்
சிங்காரக் காவினடுத்தீர்வை யிடவந்தருளி
யெங்கே நீயாதமெனக் கூவவேவையுட
னங்கோர்தருவில திர்ந்தோடிப் புக்கினனே

5. ஆரியனின் றங்கிடுஞ் சத்தஞ்
செவிக்குட் கேள்வியுற்றே யத
நான மணங்கொண் டிகழ்ச்சிக்கு
ளாய் மிகவும் வெட்கி
யடர்சோலை மீதொளியவே செய்தேனெ
னவுமார் திருவாணியெனை வோதினார்சொல்

நான்விலகும் புன்பழங் கொய்த்துஞ்
சுவைத்தற் காமெனத் தீதுட
னேனதை யுண்டிங் கிகழ்ச்சிக்கு
ளாய்மதியு மற்று
நயமேன்மை போகவர நாலுமாற
வுலகூடு சாகமுறையோ தகாது.

ஆமிது துன்பந்தருந் துப்பங்
கிலேசற்றே மனத்தேகினை
யாதுமரிந்துங் கனிப்பித்தை
யாசையுட னற்றி
யநியாய மாயுணவும் ஞாயமேதே
னவும்வேதனார் வினவும் வேளையாத
மிகழ்வுற வாதிபன்மு னெதிராடியே.

6. (கலிப்.) ஆதாதிருவாணி யர்னதனை லையனுரை
காதாரக்கேட்டுக் கலக்கமுற்றுப் பூங்காவின்
மீசேமறைந்த விதமுறைக்க வித்தகனார்
தீதாய் நறுங்கனியைத் தின்றனையோ வென்றனனே.

7. ஆடவனென் றன்புறும் பொற்பின்
றனைக்குத் தானினத்தோ டரு

ளேவையெனும் பெண்பயிற் றிச்சை
மீறுகனி பற்றி
யதிநேயமாய் விரைவிஞேடு சாவி
யெனைநாடி மாயமொழி பேசநானு

நீர்பணியுந் தந்தணங் கெத்தும்
பயிற்சிக்கான் மிகத்தான்மய
லாகி வருந்துங் கனிக்கொப்பி
யார்தி யருளற்று
நெறிநீடுன் வேதமறை மீறினேன்மின்
வாழியான தோடமிதுவே சுபாவம்

ஆகொடி தென்றெண்குணன் பக்கம்
பயத்திற் காதலித் தோதிய
மாணிடனின் பெண்டிஞக் கச்ச
மாக வசனிப்ப
ரடமாக நீயிதனை யாடும்வாற
தெனவே மையே சொலென நீதியாள
ரவையுட ஞேதிபினடுவி ஞேவிஞன்

8. (கலிப்.) ஈசாநீர் கட்டளையிட்டென்பா லிருக்கவைத்த
மாசாலப்பெண்டீர் மரத்தின் கனியளித்தா
ளாசாகத்தின்றே னென்ருத மறைத்த தற்பின்
வேசாரலாய்க் கடவுண்மின்னே வினவினனே

9. காரினை வஞ்சம்பெருஞ் சற்பம்
பயிற்றித்தா ரிடத்தோர் பழ
மார்த நவின்றுங் கலைத்திட்ட
மோசவலை சிக்கி
மதிபோயு மாயகனி மேயலான
னெனவேவை யோதவசரீரி பேயை

நீமுனையுஞ் சங்கடம் பட்டும்
பரத்திற் கீழ்விழத் தாவினை
யாயினு முன்றன் புலைச்சித்த
மேகவி லையற்று
விடமேறி யாதியுட மாதைநீக
வடமாக ஆறுகனியார் தவேசெய்

காரிய பங்கம்படும் பொய்க்கஞ்
சகத்திற் றாடனைத் தானுணு
வாய்வயிறங் கந்தணைத்தித்து
ரோகியென லச்சை
கடிதாக வூர்வனவு சீவன்யாவி
னினுநீசனுவை யுனின்மீது சாப
முகமதிலே யுனதிடர்க ளோயவே.

10. (கலிப்.) சற்பமெனை யெய்த்ததனுற் றுருகனிபொசித்தே
னற்புதனே யென்றுளரிவையைக் கேட்டான பின்பு
விற்பனன் வெதாளத்தின்மேற் சினந்து சாபமிட்டுச்
செப்பின ஞாயத்திர்ப்பின் செப்பமகா பாரதமே.

11. காரண வின்பந்தருஞ் சித்தங்
கெலிக்கச் சேதனைப் பாவிக
ளானவர் துன்பந்தவிர்த் துய்க்க
மாதினுட வித்தி
லுருவாக மேதினியி லூடுநாமும்
விடுகாலே தீயகடி நீயடாது

சீறியெழுந்துங் குறும்புற்றும்
படத்திற் றுடனைக் கேறிடு
வாயவருன் றன்தரத் தெத்தை
மாய்வுறவு மிக்க
வதிராக வேவன்முடி நாசமேசெய்
குவர் பாரமான பகை நாமுமாட

காரிகை தின்றும் பழம்பற்றுங்
கலக்கச் சேகளைப் பாரதி
லேபெறு துன்பங் கதித்திட்டு
வாதையொ டனத்து
கனசோப மோடுபெறு வாயுனுசை
பதிகீழதாகும வன்மேவி யாள்வ
னுரமெனவே யரிவையுட னேகினன்.

12. (கலிப்.) சத்துருவேயுன் றரத்தைத்தானுடைக்கவிஸ்திரியின்
வித்திலொரிரட்சகனை விட்டருள்வோ மென்றதற்பின்
சித்திரப்பெண் ணேவையுடன் றேகமெகற்ப வேதனையை
வர்த்திப்போ மென்றுன்மகிமைப் பராபரனே.

13. பாரினிலந் தஞ்செழுந் துப்பின்
றருக்கட் காய்பறித்தே தரு
காதலியின் சொற்றொடர்ப் பட்ட
வாதியுடனத்த
னிதமாக நாமுடனே தும்வாய்மை
தனைமீறியே நின்மனையாள் சொனடி

வீவுவருந் தும்பருங் கொத்தின்
பழத்தைத் தானுகர்த்தா யதி
னுலகெங்கும் குறுக்குற்று
நீண்மு ளதுபற்றி
படுசாப மேதினியின்மீ துன்வேர்வை
விழநீசெய் வேலைதிர ளாவதாலே.

பாடுமிகுந் தங்குளந் துக்கம்
பதைக்கத் தானினித் தீவன
மேபொசி யெங்கும் பரப்புற்ற
தூசிநிக ரொத்த
படிதாழ் வைநீபணைத னுன்முனை
யினிமேலு நீமணிடை போவாயாக
விகலமிக வழிவுறுமுன் மேதையே.

14. (கலிப்.) உற்றுன்மனையாள் சொல்லுவந்தெனது சொன்மீறி
யற்றகனி தின்றதினு லம்புவியின்மேற் சாபம்
நெற்றிவியர்ப்பம் விழநீ போசனம் பொசிப்பாய்
முற்றினுமணுய்ப் போவாய்முன் மண்போலென்றனனே.

15. பாவிகளங்கம் புகுந்துக்கம்
பெலக்கத் தானுறைத் தேமொழி
போத நவின்றும் பொழிற்புக்கி
வாழ்க விடமற்ற
றுதியாய் முனுதமுரு வானவேத
னிலமீதிலேய விருபேருமேகி.

வேலைவ னைந்துந் தடம்பட்டுந்
தலத்தைத் தான்விரைத் தேபயிர்
வேகிமையுந் தந்திடத் திட்ட
மாக விடையிட்டு

மெலிசான தோலினுடையே செய்தாதி
யெவைமான மூடியதி வீரமோடு

பான்மை விளங்கும்பரன் சுற்றுந்
தூரத்திக் காவினிற் சீர்மிகு
சீவசுகந்தந் தருப்பக்க
வீதிநடு மக்கள்
பலனுனதே கொய்தயிரா மல்வாண்மி
னிரு கேருபீனே வழிகாவலாக
விடுமிறை நீதிகண்முழுது மேன்மையே

16. (கலிப்.) ஆதமுருவான நிலத்தைப் பயிரிட்டே பிழைக்க
வேதன் வனத்திலிருந்து வெளியே தூரத்திக்
காதலித்துச் சீவகனியைப் பொசிக்காமற்
பாதையில்வாண்மின் சுடர்ப்பட்டார கரைவைத்தனனே.

---

## 13. வண்ணம்

### ஆதிமனுடர் புலம்பல்.

(விரு.) அதிமகத்துவ மிகு கிருபையினுய
ரரசனட் சயருட்படை யனுதின
மடியருச் சனைசெயு நிறைமகிமையி
னமலனுக் கிரவனலெரி நெறியுளன்
மதிமுகத்தினே யுளவெழி லனமெனு
மலர்கமழ்க் குழலெவை நுகர்கனியுட
மறமதற் கவர்களை நடுவருளியு
மறுகவக்கணம் வடகவுடை கள்செய்து
சதிமிகுத்திடு மலகையோ டுறவிடு
தமியருக் குதவியுமறு படியுயிர்
தருவனத் திடையொருகண மெனுமவர்
தருகிநிற் கொணதென வதிவிரசொடு
துதிமிகுத் திடுபரன்வெளி யதின்மிகு
தூரிதமுற்றெழ விடுபொழு தவர்படு
துயரமிப்புவி தனின்மிக வொழுகிய
சுகசரித் திரமுழுவது மொழிகுவாம்.

2. தனன தநதனனு தந்தனனு தனந்தன
3. தந்த ததனன ததத
தந்தனதான
தானதத்த தானதத்த தானனு

1. படியதிர்ந் திடவேயிங் கிதமாம்
வனந்தனி
லுயர்பரம் பொருளார் வந்துடனே
யதந்தனே
யந்தச்சண மழைத்தருந்திக் கனிருசித்த
வங்கப்பவ வினைக்கதிர்ந் திடலான

நெறிகள் விண்டிதமா யங்குடனே
திரிந்தெழு
மிருகவன் புனிறேகஞ் சுகமாய்
வனேந்தவை
தந்திட்டணி வனத்துணின்றப் புறமகற்றி
ரண்டெட்கெரு பினுக்குமின் சுடராடு

படர்வு கண்டகமே தந்தெதிர்பூ
ருவந்திசை
வழியடர்ந் திடவேயுஞ் சொலியே
நரன்றனே
முந்தப்பரனமைத்த மந்தைப் பெருநிலத்து
ளண்டிப்பயி ரியற்றுமென் றதினூடு
தீபுரத்தி லேதுரத்து போழ்திலே

2. பதறி யஞ்சிடுவார் நெஞ்சினிலே
யறைந்திட
ரெனமொழிந் திடுவார் துன்புறுவார்
தரந்தனி
லுங்கைக் கெதிரடித்தலங்கக் குழல்விரித்தி
ரங்கிப்புன லுதிர்த்துவிண் டொலியாக

வழு திரந்திடுவார் நொந்திடுவார்
சடந்தரை
விழ மயங்கிடுவார் வெம்பிடுவார்
வனந்தனின்

முன்பற்றிய சுகத்தை மஞ்சுக்கனிரசத்தை
விந்தைப்பல வரத்தையுந்தி யின்மீது

படநினைந்திடுவார் கெம்பியுமே
பெரும் பகை
விளைய வந்தது பேயென்றிடுவா
ரடர்ந்தெமை
வஞ்சத்தொடு மயக்கிநஞ்சுக் கனிருசிக்க
வெந்தப்படி யுரைத்தெதிர்ந்ததுகூளி
தீவினைக்கு ளாசைவைத்த பாவமே.

3. இடி யதிர்ந்ததுபோல் வந்ததுவோ
பரன்றிரு
வுரை மறந்ததுவோ சஞ்சலமோ
கணஞ் சொலும்
வண்டப்புலையுனத் தினம்பிக்கெ றுவம்வைத்தெ
மெந்தைக் கடவுளுக்கு முன்சரியாக

வமையவுந் தினதோடங் களிதோ
மிகுங்கன
பெருமை கொண்டதுவோ வஞ்சகமோ
செபம் பல
சிந்தித்திட வயர்த்துநன் புத்தியைவிடுத்த
கந்தைக் கனியைநற்றி நின்றுகளுலே

யினிதி தென்றதுவோ செங்கையிலு
லடர்ந்தவை
திருகி யுண்டதுவோ வென்செயலா
நெடும் புவி
யங்கப்பொரு ளனைத்தும்விண்டிப் படிகொடுத்து
வன்பிற்குரிய கத்தர்சங் கையைநாடி
மாபரத்தர் சீர்மறுத்த தோடமே

4. எனநினைந் திடுமாதம்பினுமே
யடர்ந்தெவை
தனையெதிர்ந் திடவேயுஞ் சினமாய்
விளம்புவ
னெஞ்சிற் பயமதற்றழிப்புக் கனிபறித்து
வந்திட்டெனையலட்டியுந் தருபோழ்தி

லதைய யின்றிடுகே னென்றனனே
திரும்பவு
மெனைவருந் தினையேவஞ் சகியே
நலங்கொடு
கொஞ்சிப்புலை யுரைத்துமிஞ்சப் பெருமைவைத்தி
ரங்கிச்சல முதிர்த்தறை ந்ததனாலே

யிதமிதென் றுடனே தின்றனனே
யருந்தின
பலனடர்ந்ததுவே யெங்கனமே
நடந்தினி
யெந்தத்திசை யினுக்குளெந்தச் செயலமைப்ப
தெந்தப்படி பிழைத்திருந் தினிமேலும்
வாழ்வுபெற்று நாமிருக்கும் வாறெதோ

5. அடியதிர்ந் திடவேயுந் துரிதாய்
நடந்தனை
நுகருமென் றிடுபோதுன் சொலையே
யுவந்தது
லன்சொற்களை விடுத்திடும் புக்கடுபழத்தை
யுண்டிப்படி தவித்துழன் றிடுகாலை

யமலன் வந்திடிபோலென் றனையே
நடுங்கிட
வுரைபகர்ந்திடு போதங்கணமே
மரந்தனின்
மிஞ்சத்திகில் பிடித்தடங்கிக்கொள வொளிக்க
வந்தத் தருணமிக்க வெண்குணதேவ

னறையு நன்பறை மாறும்படியா
யெதிர்ந்துரை
நவிலவுஞ் செயவே யென்பவமே
பெரும்படி
யென்றப்பனு மிகுத்த தெண்டிப்புட னுரைத்த
கண்டிப்பதுகளுக் குனின் செயலீடு
தாபரத்தினு லிடர்க்குளாகினேன் (அதுலன் = கடவுள்)

6. அய்யோ வென்றிடு மாந்தனினே
டணங்கெனு

மெவை நவின்றிடுவாள் வன்கடிதா
னிரும்பையி
னங்கத்துட னடுத்து நெஞ்சிற்றயை மிகுத்து
நண்புற்றுற வெடுத்து வந்தனமாக

மொழி பகர்ந்ததுவே தென்புடனே
தொடர்ந்தடு
கனி யருந்திடுவா யென்றதுவே
யதின்சொலே
யின்றிப் பரனுரைத்த நன்சொற்களே யுறைத்தும்
வண்டத்தன மிகுத்தடர்ந் திதமாக

வதிநயம் பெறவேயுந் திடமாய்
நெருங்கியெ
னுரைகள் சங்கையதோ வென்றதுவே
திரும்பவு
நம்பிக்கையி லெனக்குநிந்தைப் புலேயுரைத்தி
ரம்பப் பிணேவிளேத்திரண்டக மோடு
தான் வழுத்த நான ருசித்த காலேயே

7. கடியதிர்ந்திடவே யென்றனிதோ
டருங்கதை
மிக வறைந்தனமே புன்கனியே
பிடுங்கியு
முன்பொற் கொழுனனுக் கயின்றக் கொடுவதற்பி
னந்தப் பரமனுக்கு நன்பரிவாக

வுயர்வு கொண்டிடுவீர் துன்பமிலா
நயங்களே
யனுபவம் புரிவீருங்கள்விலோ
சனந்துற
வுண்டச்சயனேயொப்ப வஞ்சத் திடாறுத்து
நன்றுக்களே யியற்றியம்புவி மீது
கன நலங்களே மாயங்களேயே
யறிந்தக

முணர்வு கொண்டிடுவீரென்றிடவே
யருங்கனி

கொண்டச் சண முனக்கருந்தப் பரிவுவைத்து
நுந்தித்தர வெனக்கு வந்தது போதும்
ஆபவத்திஞ லுதித்த கேடிதே.

8. கடினமென றவளோதும் பொழுதே
பயம்பெற
வுனையு நொந்தினியாகும் பொருளே
துசுந்தரி
பந்தக்கடி விடத்தையந்தக் கனிர்சத்தை
யெங்கட் குறுபவத்தை நொந்திட ஞாய

மெனவதஞ் சொலியே மங்கையரே
யுனின்பெய
ரவையு மென்றனனே பின்புயிரா
யெழுங்கன
சங்கத்திரள்களுக்கு மூந்தத் தலைமை பெற்ற
நண் புற்றனையெனப் பினங்கருகான

கரு நிலந்தனிலே வந்தவர்தா
னிருந்ததி
பனை யிறைஞ்சினரே புந்தியிலே
செபந்தனை
விண்டித் தரையதற்குள ண்டிச்செயனடத்தி
யுந்திப்பசி தவிர்த்து விந்தையதாக
வாசையுற்ற காதை மெத்தவோதவே

---

## 14. வண்ணம்

### சூசீஞபேலின்பேரிலே.

(விரு.) ஆதந்துணையாளுந் தமதாகந் துயர்மூழ்கி
யாயன்றரு சீரின்படியே யம்புவிமீது
பாதம்பட நோகும்படி பாடும்பட வேர்வை
பார் சிந்தினர்வேதன்றரு சாபங்கடிதாலுஞ்
சேதந் தொடர் காலந்தனிலாதந் துணையாளுஞ்
சேயரண்டுறவே தந்தனன் காயின் பிறகாபல்
வெதம்பகர் நேரங்கவர்போயும் பெலிபோடும்
வீறின்கதை தானிங்கித மோடும் புகல்வேனே

2. தனனு தனனு தனனத் தனன தத்
3. தனனந் தனன தந்த
தானன தான
தான தந்த தனதான தானனு

1. அதமேவையுமே மனதிற் றுயர்கதிக்க
வழுதார் விழிநீர் சொரியக் கவலைவைத்து
நிமலன்றனை யிறைஞ்சு
செபமந்திர மொழிந்து
புவியங்கணுகி நின்று மாறின தீய

கனியார் தினதால் வருகஸ்திபை நினைத்து
வெகுபாடதனுல் வெயர்வைப்பட மிகுத்த
பல துன்பமு மிகுந்த
கருமங்களை வனைந்து
தரையின் பலனருந்தி யேவருநாளி

லனையேவையுமே நிறைகெற்ப மிகவுற்ற
தசமாதமுமாய் வயிறக்கணம் வலித்து
முழுவுந்தியு முளைந்து
சடலங் கடுக நொந்து
பெறுகும் பொழுதயர்ந்து சோபமதாகி

வேதனன்று சொன நீதியாய்வனே

2. அயயோ பரனுரெனை மெத்தவும தட்டி
யிடர் நீ யிடலாலுனிலுற்றடரது கெற்ப
வலிமிஞ்சிட வருந்தி
யிடவுன் சடல நொந்து
கதறும்படி மிகுந்த வேதனையே செய்

திடுவோ மெனவே சொன தற்பரனுவற்சி
நிறைவேறிடு நாளி தெனத்துணிவு பெற்று
முதன் மைந்தனை மடந்தை
பெறவுங்கவனை யன்று
கயினென்ற னணிந்த நாமமதாக

வவனே பரனுர் சொன ரட்சகனெனத்த
னுளமீதினிலே யதிபட்சம துவுற்றுரு
மிரவும் பகலு மரண்டு

பொழுதுஞ் சுப மிகுந்து
வளரும்படி யணங்கு மாதயவாக
வேண் மிகுந்து செயமேன்மை யாகினான்

3. இதின்மேல வடான்மறு கெற்ப விதமுற்றி
ளமையோனொனு மோர்மகனைப் பெறவுமிக்க
தவனின் பெயர் சிறந்த
வபலென்றறி வுயர்ந்த
தருமன் பொறையணிந்த சாதமான

கருணாகர மாதவ சற்குண முளத்தி
லுள சேகரனு மதியுத்தம நடந்தை
யியல்புஞ்சிதநிறைந்த
குணமும் பொருளடர்ந்த
கவியும் பல தறிந்த பேர் பெறும் ஞானி

யினிதாகிய மாமறையுட் பொருள்படித்து
மிகுதாழ்மையுமாய் மனதிற் பெருமையற்ற
னையர் தந்தையுமயன் சொன்
மொழியுந் தமையன் விண்ட
வுரையும் பிசகதன்றி நேர்மையதான
போதகங்களுள ஞானபோதனே

4. இணையாயிருபேர் தொழில்பற்றிய விதத்தின்
முறைகாயினுமே பயிரிட்டிட நிலத்தை
யுழுதெங்கணும் விளைந்த
களையின்றிரள் பிடுங்கி
யுயரும் பலனிறைந்து சேரும் வேளாண்மை

விதமே யிடுவானிவனுக் கிளைய சித்த
னபெலோ திரளாடுகளைத் தொழுவமைத்து
ரிமையின் குளகு வந்து
தாவும்பலுக மந்தை
பெருகும்படி வனங்கண் மீதினிலேகி

யிசைவோடயமேய்வுற நற் செயலியற்ற
முதுகாயினு மோர்பகலிற் பரமருக்கு
வெகு விந்தையினிலங்க
டருகுங் கனிபலன்கள்

கொடுவெந்தனன் மிருந்த வாண்மையதோடு
பூசை தந்து தொழ நாடி மேவினுன்

5. துதியா பலுமே புருவைக் குலமதற்கு
டலையாகிய தோர் பறழைக் கருதிநற்றி
மறுவின்றிய மணங்கு
களிநெஞ்சது பிளந்த
துகளிஞ்சிய வழும்பு தானியல் போடு

வெலியே யிடலானதை நற்பரனினைத்து
விழியாலவன்மே லருள் வைத்தனர்திடத்தி
வெறிகொண்டவனை யெந்தை
யிகளும்படி முனிந்து
தருகும் பலனு வக்து பார்வையிடாத

துயரால வனுசியம் வெற்றுருவு பட்டி
டவுமே பரனூர் வனுக்குரைகள் பற்றி
யுனதங்கமு ளெரிந்துன்
முகமந்தர மடைந்துன்
மனமுங் கடுகவெம்பி வாடுவதேது
நீயு நன்று செய மேன்மையாகுமே

6. துரிதாகிய தீவினையைச் செயவுனக்கு
நயமேதிடர் வாயிலினுட் பதிவிருக்கு
மதனஞ்சலி வளர்ந்து
னிதையங்க ளிடை தங்கு
மதைவென்றறி விலங்க வாளுரமாக

வென நாயகனே திடமுற் சினமதுற்று
டனுமா பெலினேடுரை யிட்டனன் வெளிக்குள்
வரவுங் கறுவிநெஞ்ச
முழுதும் பகையடர்ந்த
கயினுஞ் சினமெழும்பி யாபலின்மீது

துடியோடதிர் பூமியினிற் படவடித்தோர்
தடியான் முடியானதை யக்கணமுடைத்து
வினைதந்திடவன்ற
னுதிரந் தரையினின்று
பரமன்றனை யிரைந்தனுதி யோலோல
நீயிரங்கெனவு மோசையாகவே

7. கதியாள்பரனே சருவத்தையுமமைத்த
பொருளே மலமாயைகளற்ற பரிசுத்த
திவிய செங்கதிரனந்த
வொளிவின் சுடர் சிறந்த
பொறையன்பது மிருந்த நேசதயாப

வசரீரியொரே சுயசத்திய மறைக்கு
முதலே முடிவே திரிதத்துவ மகத்துவ
மிகுசங்கைகள் கனங்கள
புகழ் மங்கள முழங்க
நவசங்கமும் வணங்க ஞதிவிசேட

கலைகோடிகள் ஞானமும் விற்பனமுடைத்த
கிருபாநிதியே யளவற்றெறியு முக்கிர
வெரிபந்தழன் மிகுந்த
நெறியின் படியெழுந்து
புவியெங்கணு நிறைந்த தேவசொரூபி
பாததஞ்சமெனவாபல் கூவியே.

8. கனிமாதுண பாதகமித்தனை கொலைக்கு
ளுளதாகின தான்மகிமைப் பரனுனக்கெ
திரவும் பெருமை கொண்ட
பவமிங்கெனை வளைந்து
மரணங் கடுகவந்து பேதகமா யெ

னையுமே வதையாயுயிரற்றுடல் துடிக்க
நிலமீதினிலே குருதித் துளி சிதர்த்த
வணனும் பழி நினைந்து
சொனபந்தைய முடிந்து
பழிகொண்டனை னிரங்கோ ராதரவேயில

கதியே மதியே நவ சத்திய பரிசுத்த
பொருளே தெருளே யளவற்ற கிருபையுற்ற
கனசுந்தர சவுந்தர
சரணங் கெதிமுனம்பு
மெனை யங்கழையனந்த தேவ சினேக
பானுவென்று செபமே செய்தேகிறேன்.

## 15. வண்ணம்

### காயீன் ஞாய விசாரணை.

(விரு.) ஆபெலென்றவ னையமென் றருளியபறை
கேட், டாயனுன மெய்க் கடவுளரெழுந்து வந்ததிராய்க்
கோபமோடிடரே புரிகாயினின் கொடுமை
கோரமாமென வவனுடனெதிர் மொழி கொடுத்துச்
சாபமே யிடத்தணிந்தவன் பொறுமை கேட்டிறைஞ்சத்
தயாபமாகினர் தம்பியைக் கொன்ற பாதகன்மேற்
பாவமாறிடப் பரமனுர் பணித்த பினுதம்
பாவையோடடர்ந்தியல் கருமங்களைப் பகர்வாம்

3 தான தாந் தான தன
தயயா தனந்த தன
4 தனதான தான தந்த
தனத்த தன தனன தனத் தானனு

1. ஆகமாந் தேவசுவிசேட பாங்கானவதி
ஞானகாம்பீர செய
மெய்யாமனந்த னெரு
பரதேவ தேவனங்கு
லகமீதிலே யெழுந்து
துதிகூறுமாபலென்ற
வனையே கொல் காயின் முன்பு

பாவி யீங்கோதுனது சாததாந் தூயவிளை
யோனும்யாங் கானதென
வில்லா தகங்களுள
பழிகாரனுன வஞ்ச
னறியேனிதேது சங்க
டமயா சொலீரவன்ற
னரணேவியானு மென்க

வாதியான் கோபமொடு பூமிசார்ந்தேயுனிளை
யோனிலாஞ் சோரி யொலி
யையோவி தென்ற பைய
மதிராகவே புலம்பு
தடபாவி நீ வனைந்த

வஞ்சியாய மாமிதென்ற
வனிேேனுடு பேசி வண்ட
னிழைத்த பழி கொடிய கொலைக்காகவே.

2. ஆபெலான் சோரி கரமீது தான் சேரவுண
வாயணுர்ந்தேறுலகி
லில்லாதிறந்து விழ
வழிவாயுன் மேல தங்கண்
மிக வாகும் வேர்வை சிந்த
மிகுபாடு தானமைந்த
தினமான வேலை தந்து

மீர மூன்ருது பயிர்நீயு மோய்ந்தே நிலையி
லாது சோந்தே படுவை
துள்ளா தடங் கெனவு
மமராடியே பறந்து
போறை ஞான மான தம்பி
யுயிரானதே கவர்ந்த
சதிகாறனேடியம்ப

வாண்மை பூண்டேறு பழி காயினுன் சோபமொடு
தேக நேர்ந்தே பதறி
மெய்யா வுன்றஞ்சமினி
யடியேனை யாள்வ துந்த
னருளாகும் வேறு தம்ப
மறியேன யாவிரங்கு மிருபாதமே யடைந்த
னெனப் பரனே மனமுருகிக் கூவியே

3. மோகமாம் பாவி யென்தேத நீங்காத கொடி
தான வூன்றேட மதி
னுள்ளாய மிழந்து மெனே
முனிவாகவே சினந்து
பதிமீதிலே யிருந்த
றுதியாகவோட வின்று
விடயானுமே யுடைந்து

பூமி பூந்தே நிலையிலாது தேய்ந்தே யொழிவ
னேமிகாண் போர் தயவு

செய்யாதருங் கொடுமை
புரிவாரெனுவியஞ்ச
வதிகோர மாயடர்ந்தே
ரிகள்போலவே சினந்து
கொலுவார்களே துணிந்து

மூடனுந் தீயவடியேனை யாண்டாலுனது
நேசமாங் கோபமிக
வையாதிரங்கு முனின்
முகபார்வைதான் மறைந்து
லகினூடெலா மலைந்து
கெடுவேன யாவொடுங்கி
யெனையாளனுதி தஞ்சம்
விளக்க மறவினை பிடிக்கலாகினேன்

4. மூழுதீங்கான பவநாச வான் சோதியென
வீனவான் ருனறைய
வெல்லா மறிந்த பரன்
முனியாமலே த்ணிந்த
வனிஞேடுமே நயந்து
ரிமையாகவே யியம்பு
மொழியானதோ நயங்கள்

கோரனுங் காயினையுமாவி சோர்ந்தே கொலுவன்
மேலு மூண்டேழு பழி
வல்லா யெழுந்தவனை
யிடியாகவே தொடர்ந்து
சுமர்வா மெயாகு மென்று
கொலை பாவமே சமைந்த
சதிகாரனே டறைந்து

மோச தீங்கா யினனை யாவர்தான் காணினும்வி
ரோத வாங்கார மொடு
கொல்லாத கன்று விட
முக மீதிலே படர்ந்த
வடையாள மான தொன்று
முதலோனுமே வரைந்து
பரலோக மீதெழுந்தன்
மிகைக்கயினும விடம் விடுத்தேகினன்.

5. மேகவார் சேருமினலோடு பூங்காவினுறை
தேனுமாங் கோகிலமு
மோவ் வாதணங்கு மொழி
யொளியான வேலிலங்கு
கயலோ கணுடிதந்த
மெனு மேனி தானெழுங்கு
சிறு ரோமமோ நெருங்கி

மாலை சேர்ந்தாடு குழலீபனேன் கேதரெழின்
மார்பு தாங்காத திடை
மெய்யோ பசும் பொனொளிர்
மதியோ முகார விந்த
மிசை தேனிலேயு மின்பம்
வளர் மீனிலே துலங்கு
பணியாடை பூடணங்கள்

வேத மோங்காத கனியோ தவாய்ந்தே மிசையு
மேவை யாங்காரமொடு
தள்ளாடி யங்கு துயர்
மிகவாகியே மலங்கி
யபெல் மேனிமேல் விழுந்து
வினையோ விதேதென ன்பின்
மகனே நீ தானிறந்து
னுழப் பகல வுயிர்விட முற் பாவமோ

6. வீறினுங்காரமுள காயினன் கோபவெறி
யாலுமூண்டே யுனையு
மெவ வாறடர்ந்து கொல
வினைதேடி னன் மிகுந்த
சதிகாறனை வஞ்ச
னயயோ முனுளி லந்த
மருளோடு பேசி நின்று

வாழ்க வாண்டோனை யிகழ் பாவியான் றீய நினை
வாலுமீண்டே கனி கள்
கையாலி ணிங்கி நுகர்
மறமோவி நாளிலங்கம்
வலுசோர்பினன் மயங்கி

யிருண்மூடவே விளைந்த
தினி நானு மாவி கொண்டு

வீடு பூந்தே கணவனோடு வாழ்ந் தாவியுய்வ
தாகும் வீம்பேததினி
நல்லோரிகழ்ந் தறைவர்
விபரீத மாயினங்கள்
பழிகூறுவார் களிங்கெ
னுடனேகவே யுருண்டு
விதி கூறியே புலம்பி
யுரத்தழுது மகளை யொருக்காலுமே

7. எநபாங்கான வுயிரோடு நாங்காணும்வித
மேது நூங்கேதுகடி
யெய்யாமை கொண்டருளு
மெளியாள் பொலாதகும்பி
தனிஞலோ டாறு திங்க
ளியல்பாகவே சுமர்ந்தெ
னிளைமேனி சேரவெம்பி

யாகநேர்ந்தூறவலி
மேவியீன்ற தரையின்
மாயை வீண்கால மிதி
ஞெய்தா நறுந்துயில்க
டனின்மூடியே சிறந்த மணியாடு தூயமஞ்சு
வணை மீதிலே யொழுங்கின்
முறையோடு மேதவிழ்ந்தொ

ரீனதீங்கானது கடாவி நூங்காதுவிளை
யாடு பூம்பாலகளை
நல்லாய் வளர்ந்துவர
விதமாகவே பரிந்த
திகநேயமாய் நயங்க
ளினிமேலுமே துவிந்தை
யெனவே செய்தோ மகிழ்ந்து
வளர்த்த திகநினைவுகளுக் காகினோம்

8. ஈதெல்லாந் தாபமுடனே செய்தோம் பால
கனு, மேவியார்ந் தேயுயர

மெய்யாய் மனங்கள்பர
வசமாகியே குளிர்ந்தி
னியவாய்மை தானிதென்று
றுதியாவே நினைந்து
விசுவாசமாக நம்பி

வாரயாண் டேவினைகடானு மூண்டாலென செய்
வோமெலாந் தோடமென
வில்லாண் மயங்கிவிழ
மணவாளனு தனங்கு
துணையாகவே சயம்பின்
மறையோதி வாசகங்கள்
பலநீதிதான வின்றி

தேது பூந்தேன் மொழிம
ணுளிகாய்ந் தேயமுது
சோரவேண்டா மெனவு
மையே விளம்பியினி
வலியாண்மை பேசி யென்சொல்
கயினுனை யேசி யென்சொ
லபஞேனை நாடி யென் சொ
லெனவாறினுர் கடுன்ப
மடக்க மென மகனை விடுத்தேகினுர்.

---

## 16. வண்ணம்

### பழைய உலகத்தின்பேரிலே.

(விரு.) சாதி யெங்குமொருங்க வளர்ந்தது
சால வஞ்சக டங்கண் மிகுந்தது
சாமி யன்பு செபங்க டவிர்ந்தது
தாழ்வுகொண் டகிலங்கெட நின்றது
பாதகங்கள் படர்ந்து திரண்டது
பாவையின் பிரமை மிஞ்சவடர்ந்தது
பாவசங்க வினங்கள் கலந்தது
பாசமைந்தர் பயங்க டெளிந்தது
போதகங் கண்மறந்து விழுந்தது

பூரணன் றருமங்கள் கலைந்தது
பூதமும் பகை கொண்டு தொடர்ந்தது
போரிடுங் கலகங்க ளெழுந்தது
நீதியின் செயன்மங்கி யயர்ந்தது
நேயனின் சினமண்டி யெரிந்தது
நீடு கொண்டல் சலங்கள் பொழிந்தது
நீர் பரந்துலகங்க ளழிந்ததே

4. தான தன தானன
2. தந்த தத ததன தத தான
தான தந்த தான
தனன தன தனன தன தன தனே

1. ஆதி முதலோதிய வேத சுவிசேடமெ
ஞான வொளிவாகிய நீத பரமேசுர
ரன்புக்குட் கதித்த தேவ
வின்பத்துட் பெலத்த வான
வும்பர்க்குட் கிருத்திரமான
வாதுகொண்ட கூளி

யூழிவினை தீர மகாகிருபை யாயனை
மாதினிடமாய் மகனுரை யருள்வோமென
சிந்தைக் கற்புதத் தயாப
பந்தத் தட்சயத் ததீத
விந்தைச் சொற் கொடுத்ததேவ
ராதியந்த மான

ஆரண பராபரகாரண கிருபாகர
தாரண சாரசர பூரண மனோகர
சந்தத்துச் சிதச் சினேகர்
சங்கைத் தற்பரத் திரியேகர்
பங்கப் பட்டனத் தபேர்கள்
வானடைந்து வாழ்க
அதிக நவமருள் பரம கருணையார்

2. ஆதரையின் மீதுறை யாதியுட சேயர்கள்
பாதகமகா கொடிதாமென வனுதியர்
கண்டிட்டுத் துயர்க்குசொரல்
பந்தத்துக் கிரத்தினீதி

கொண்டிட்டச் சனத்திரளை
யோடு விண்டவாய்மை

பாருலகின் மீதினுலாவியதில் யாவையு
நேர்மையுறு பார்வை செய்தோ முலகமோபடு
பந்தத்துட் கிணக்கையாகி
வண்டத்துற் சுகத்தை நாடி
மிஞ்சிக் கெட்டிகழ்ச் சிமேவ
வேயகந்தை மீறி

யாண்மை யடமான விரோதமெழுகாம
விகாரம தலாகிரியேறி யனுபோகம
டந்தைச் சிக்கிழுக்கின் மாய
வஞ்சத் துர்குணத்தினாலே
நெஞ்சத்தைக் கலைத்த தீமை
யோர்கள் கொண்டபாவ
மளவிட வரியகொடிய துரிதமே

3\. தீதிதுகளான் மன நோகுதயயோ வுல
கானதை யெலா மழிவாக வதமே செய்து
தொந்தத்துற் புவிக்குண் மேவு
சென்துகட் கணத்தனேக
மண்டத்துட் பறக்கும் வீக
ளோடு கண்டயாவு

மாளமுடிவாகிய தீர்வையிடுவோ முகி
லோ பரவியே யதிகோரமுடன் மாரி பொ
ழிந்திட்டுச் சலப்பிரவாக
மிஞ்சிக் கொப்பளித்து மேவி
சும்புக் குட்டுளைத்து மேறி
வானிருண்டு மூடு

தேசுமினலோ விடியோ குமுறலோ வொலி
யோ கடினமா மதிரோபக ரொணுததது
மங்குற்றிக் கனைத்து மோடி
யுஞ்சத்தத் தடிக்கும் வேளை
யங்கத்துட் பதைத்து நீரிலே
யமிழ்ந்தி மாள்வ
ருதிரமுள பொருண்முழுது மொழியுமே.

4. தேயமதி னீயொரு பேழைதனையே கொபே
ராகமமதால் வினைவாய தனிலேயறையுந்
தட்டுப் புறத்தின் வாயன்
முன்றட்டுத் திருக்கு வீடு
சந்துக்குட் புறத்துமேலை
கீலகள் கொண்டு பூசு

பேழையுட னீள மூ·னூறகலமே யரை
நூறுயர மூபது நேர்மை முழமாக
வமைந்தோத்திக் கதிர்க் கடாவு
பொ:திட்டுத் திறப்பையே செய்
முன்றட்டுக் கடுக்க வாய்மை
யேயணிந்த தாய்வை

சீர் வரிசையாய் முதலா மறைபினே நடு
வாமறை திரியாமறையாவு மணியாய் வினை
யுன்பக்கத் தியற்றுவோ நம்
மன்புக்குட் பிடிக்கையான
தென்றிசைக் கருத்தினோடு
நோவை முன்பனுதி
யுயர்கருணையுட னினமுமுறை செய்வார்.

5. சாதுகுண மாதவமேன்மையுள நோவைய
னேநமது பாதம்விடாத படியாலுனை
யிந்தத்தூர் சலத்திலே
மடிந்துட்கிக் கெடப்பணுதுன்
மங்கைக்குற் றிரக்கமே செய்
தானமைந்தர் மூவ

ரோடவர் கடேவிகண்மூவ ருடனுகவே
ணோர்களொழிலா யுயர்பேழையி னிலேரியி
ருந்துப் போற் களிப்பிலே
மகிழ்ந்துச் சச்சமர்த் தராயொ
ழுங்கச்சொற் பயிற்றினேமு
னேடு தஞ்சமான

தாரணியிலே யுறைமேதை யுளசிவனி
லாணுமகடா யொருசோடு தெரிவாய்மிரு
கங்கட்குட் டொகைக்குளோர்வ

னங்கட்குட் டொகைக்குள் வான்வி
சும்புக்குட் பெருத்தவீகள்
சோட தொன்றுசேர்ந்து
சதிரினவை களினுனதி னுணவுசேர்

6. தாமதமிலா மலிநேரமு ஞெடோதின
வாய்மை பிசகாததி வேகமுடனேயமை
யென்றுக் கிரத்திரித் துவதேவர்
